VNR11His

விருதுநகர் மாவட்டம்
முதல் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு 11
வரலாறு

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி -I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 20×1=20**

1) மெஹர்கார் ................ பண்பாட்டுடன் தொடர்புடையது
அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம் இ) இடைக்கற்காலம் ஈ) செம்புக் காலம்

2) கீழ்க்காணும் இணைகளைக் கவனிக்கவும்
i) சேனானி - படைத்தளபதி
ii) கிராமணி - கிராமத்தலைவர்
iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
iv) புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

3) வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்தாக வளர்ந்த அரசு ............ ஆகும்.
அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

4) ............ என்ற இலங்கையில் கிடைத்த பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.
அ) மகாவம்சம் ஆ) தீபவம்சம் இ) பிரமாணம் ஈ) முத்ரார்ராட்சசம்

5) ............ ராஜசூய யாகத்தை நடத்தினார்
அ) பெருநற்கிள்ளி ஆ) முதுகுடுமிப் பெருவழுதி இ) சிமுகா ஈ) அதியமான்

6) இந்தோ - கிரேக்கக் கலை மற்றும் சிற்பப்பாணி ............ என்று குறிப்பிடப்பட்டது.
அ) மதுரா கலை ஆ) காந்தாரக் கலை இ) பாக் கலை ஈ) பாலா கலை

7) கீழ்காண்டவற்றில் எது குப்தர்காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?
i) உதயகிரி குகை (ஒடிசா) ii) அஜந்தா - எல்லோரா குகை (மகாராஷ்டிரா)
iii) எலிபண்டா குகை (மாகராஷ்டிரா) iv) பாக் (மத்தியப்பிரதேசம்)
அ) (i) ஆ) (ii) இ) (iii) ஈ) (iv)

8) கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
அ) ஹர்சசரிதம் ஆ) பிரியதர்சிகா இ) அர்த்தசாஸ்திரம் ஈ) விக்ரமஊர்வசியம்

9) அயல் நாட்டு வணிகர்கள் .............. என்று அறியப்பட்டனர்
அ) பட்டணசாமி ஆ) நானாதேசி இ) விதேசி ஈ) தேசி

10) கஜினி மாமுது இந்தியாவுக்குள் .......... முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
அ) 15 ஆ) 17 இ) 18 ஈ) 19

11) பொருத்துக.
i) படைமுகாம் - 1. படைவீடு
ii) புறக்காவல் படைகள் - 2. தண்டநாயகம்
iii) தலைவர் - 3. நிலைப்படை
iv) படைத்தளபதி - 4. படைமுதலி
அ) 1 3 4 2 ஆ) 4 2 1 3 இ) 2 1 3 4 ஈ) 2 3 1 4

12) **கூற்று** : பாமன்ஷா மிகச்சிறந்த தாக்குதல் தொடுத்து வராங்கல்மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோறும் திறை செலுத்த வைத்தார்
**காரணம்** : இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது
அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று
ஆ) கூற்று சரி, காரணம் தவறு இ) கூற்றும் தவறு, காரணமும் தவறு
ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்.

13) மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் ............ ஆவார்
அ) இராமானந்தர் ஆ) மீராபாய் இ) சூர்தாஸ் ஈ) துக்காராம்

14) ............ தனது ஆட்சியின் போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான் ஈ) ஔரங்கசீப்

15) சிவாஜியின் ஆலோசனை சபை ............ என்று அழைக்கப்பட்டது
அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்கஜங்கள்
இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்

16) இரண்டாம் சார்லஸ் வரதட்சணையாகப் பெற்ற ............ ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டது.
அ) மதராஸ் ஆ) கல்கத்தா இ) பம்பாய் ஈ) தில்லி

17) வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் படி ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் ...........
அ) நாக்பூர் ஆ) அவுத் இ) ஜான்சி ஈ) சதாரா

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18) சரியான கூற்றினைத் தேர்ந்தெடு
அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்
ஆ) துணைப்படைத் திட்டத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவவளங்களும் செயல்திறனும் குறைந்தன.
இ) வெல்லெஸ்லி பிரபுவால் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதரசா
ஈ) டல்ஹௌசி பிரபு மார்ச், 1835 இல் கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்

19) 1857 ஆம் ஆண்டு புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் - ஜெனரலாக இருந்தவர் ........ ஆவார்
அ) டல்ஹௌசி ஆ) கானிங் இ) மின்டோ ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே

20) 'வேதங்களை நோக்கி திரும்புக' என்று முழக்கமிட்டவர் ............
அ) இராஜா ராம் மோகன்ராய் ஆ) தயானந்தசரஸ்வதி
இ) விவேகானந்தர் ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

## பகுதி -II

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 30 கட்டாய வினா. 7×2=14**

21) வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?
22) ஜென்ட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.
23) நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபீடங்களை எழுதுக.
24) அலெக்சாண்டரின் படையெடுப்பு எந்த வகையில் இந்திய வரலாற்றில் திருப்புமுனையாக அமைகிறது?
25) ஐஹோல் கல்வெட்டு குறித்துச் சிறுகுறிப்பு வரைக.
26) சோழர் காலத்து கால்வாய்களில் அரசர்கள், அரசிகள், கடவுளின் பெயர் சூட்டப்பட்ட கால்வாய்கள் யாவை?
27) முதலாம் முகமது பற்றி நீங்கள் அறிந்தது என்ன?
28) அக்பர் பைராம்கானை எவ்வாறு கையாண்டார்?
29) கார்டஸ் முறை என்றால் என்ன?
30) சமூக நீதிக்கு ஜோதிபா புலேவின் பங்கு என்ன?

## பகுதி -III

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 40 கட்டாய வினா. 7×3=21**

31) இந்தியாவின் இடைப் பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளை எழுதுக.
32) தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கைக் குறிப்பிடுக.
33) இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்களைக் குறிப்பிடுக.
34) கிழார் - வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்
35) கிரேக்கருடனான இந்தியத் தொடர்பின் விளைவான பண்பாட்டுத் தாக்கத்தின் சிறப்புகளைக் கூறவும்.
36) எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்
37) முகமது-பின்-காசிமின் இராணுவப் படையெடுப்புகளுக்கான உடனடிக் காரணங்களை விவரி.
38) இராஜேந்திர சோழன் 'கடாரம் கொண்டான்' என அழைக்கப்படுவது ஏன்?
39) கபீரின் போதனைகளை விவரி
40) மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள்

## பகுதி -IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 7×5=35**

41) அ) சிந்து நாகரீகம் ஏன் ஹரப்பா நாகரீகம் என அழைக்கப்படுகிறது? **(அல்லது)**
ஆ) இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டப் பண்பாடுகளைப் பற்றி விவரி.

42) அ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி. **(அல்லது)**
ஆ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும்.

43) அ) 'குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்' விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) ஹர்ஷரின் சமயக்கொள்கை பற்றி விளக்கம் தருக.

44) அ) அலாவுதீன் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) கோவில் - ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக

45) அ) சூபியிஸத்தின் தாக்கம் பற்றி விவரி **(அல்லது)**
ஆ) வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக ஆங்கிலேயர் எவ்வாறு எப்பொழுது மாறினர்?

46) அ) முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. **(அல்லது)**
ஆ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் அக்பர் பேரரசின் எல்லையை வரைந்து கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்**
1. கோண்டுவானா 2. அலகாபாத் 3. காந்தகார்

47) அ) ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்விமுறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது?
**(அல்லது)**
ஆ) ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள் நிகழ்வுகளில் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com